


# திருவாளர் முருகேசு கந்தையா

அவர்கள்

நிறைவுயர் நிலையாம் இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

24-04-2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



விடத்தற்பளை மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவுங்
கொண்டவரும், உசன் மிருசுவிலைத் தற்காலிக வதிவிடமாகக்
கொண்டவரும் முன்னைநாள் இலங்கை போக்குவரத்துச் சபையிலே
நடத்துநராகவும் நேரக் கண்காணிப்பாளராகவும் பணிபுரிந்தவரும்
தன்னலமற்ற சமூக சேவையாளரும் ஆன்மீகவாதியும் ஆகிய

# திருவாளர் முருகேசு கந்தையா

அவர்கள் நிறைவுயர் நிலையாம் இறைபதம் எய்தியமை குறித்த


# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24-04-2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



இந்தமண் அதனில் எங்கள்
இன்னுயிர் அதுவாய் நின்று
சிந்தனை அறிவு பேறு
சீரெலாம் சிறக்கச் செய்து
நிந்தனை சிறிது மற்ற
நிறைவுயர் நிலையோர் தாளில்
வந்தனை செய்த வாறே
வகைமலர் இதனை வைத்தோம்

இவ்வண்ணம்

**மனைவி, பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணில் வின்னில்

1943.11.09 2014.03.25

# திருவாளர் முருகேசு கந்தையா


## திதி நிர்ணய வெண்பா

வெற்றிவிரி விஜயமதில் விளங்கிடுபங் குனிமாதம்
பெற்றிதரு பிரியபர நவமிதிதி - உற்றமைய
முந்துமுயர் கந்தையா முருகேசு தந்த மகன்
விந்தையிறை பேறுற்றார் விரிந்து.

(திதி : பங்குனி மாதத்துத் தேய்பிறை நவமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகேசு கந்தையா இளமையில்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமுறை அமிர்தம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசும்நாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எிய பெருளெலாம் எழுதி முற்றுற
கண்ணுதலுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினைதீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோக வெள்ளம்

## இறை துதி (அறுசீர் விருத்தம்)

செம்மையே சேர்ந்த மேலோர்
சீர்முரு கேசு மைந்தர்
தம்மையே பணிக்கு நல்கும்
தன்மைசேர் கந்தை யாவோ
எம்மையே வியப்புக் காக்கி
ஏற்றன ஆற்றிப் போற்றி
இம்மையே துறந்த பான்மை
இயம்பிட இறைதாள் கொள்வோம்.

## பொது (அறுசீர் விருத்தம்)

இடம்பதி அதுவே மேவும்
இன்விடத் தற்ப ளைமேல்
திடம்பெறு திருவி னாளர்
திகழ்முரு கேசி னோடு
உடன்படு சின்னம் மாதன்
உயர்மகன் கந்தை யாவும்
கடன்பணி முடித்த தாம்போல்
கடந்துடன் நடந்தோ கொண்டார்!

நற்பணி நயந்து நாளும்
நல்லன பல்க நல்கிக்
கற்பன கற்று நின்ற
கருணைகொள் கந்தை யாவும்
கற்பரு மனையா ளான
காரிகை ராசம் மாவும்
மற்றுடன் கலங்கி வாட
மண்ணதைத் துறந்தோ கொண்டார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்மகன் சிவகு மாரும்
மூத்தபெண் சிவசோ திப்பேர்
பின்னுடன் சிவநி திக்கோ
பேண்மகன் சிவத ரன்மேல்
நன்மகள் சிவம திக்கும்
நாடுமோர் பிதாதன் போக்கு
என்னெனும் ஏக்கம் கூட்ட
எண்ணருஞ் சோக முற்றார்!

சொன்னவர் அன்னப் பிள்ளை
சொல்லுசெல் லாச்சிப் பிள்ளை
அன்னவர் முன்வந் தோர்கள்
அகலக்கந் தையா வாழ்ந்தோர்
என்னவர் என்று சொல்ல
ஏற்றன ஆற்றி நின்றோர்
பின்னவர் முன்னோ ரோடு
பெயர்ந்துடன் இணைந்தோ கொண்டார்!

மருகரோ மருகி மாராய்
மருகுரு பவத னிக்கும்
அருகுண ரத்தி னம்பின்
ஆர்சுதர் சனவர் மேலும்
பெருகவே பிரதீ பாவின்
பேர்பெறு கமல தாசன்
அருகதே அழுதார் மாமா
அகன்றதாம் அவலம் கண்டு

பேரர்பேர்த் தியர்சு லோசிகா
பேணுகே னுஜாலக் சியாவோ
ஓரறிர் ருசனா நிகேதன்
உறுதுர்க்கா ஜினிசுரு திகாவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரப்பா னுசாப விசனும்
சற்றுப்பின் ரதுர னோடு
சேரச்சீர் பேர னாரும்
சென்றதால் செயலற் றாரோ?

உறவென உள்ள வுள்ளோர்
உற்றதற் பராதே விக்கும்
பிறநலச் செல்லம் மாவும்
பேசிடு தங்க முத்து
திறமுறு முருகே சோடு
தேசுறு நலத்தோர் நண்பர்
அறமுற கந்தை யாவும்
அகன்றதால் அழுதே கொண்டார்!

உன்னிடும் உயர்கந் தையா
உணர்விடத் தற்ப ளைமேல்
தன்னுயர் தந்தை தன்னைச்
தான்சிறு வயதில் நீத்தோர்
முன்னுறும் அன்னை கையில்
முற்றுற வளர்ந்த நல்லோர்
என்னுறும் என்றே இன்று
இப்புவி துறந்து கொண்டார்!

உயிர்த்தொழில் அதுவாய் முன்னாள்
உயரிய தன்மை யோடு
பயிர்த்தொழில் பார்த்து நின்ற
பாங்கினர் கந்தை யாவும்
தயிர்ப்பெறு தண்மை வெம்மை
தான்துயர் மகிழ்வும் காண்போர்
உயிர்ப்புயர் வாழ்வு விட்டு
ஓடியே அகன்று கொண்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்விடத் தற்ப ளைமேல்
உணர்கம லாச னித்தாய்
பெயர்பெறு பள்ளி யுற்றுப்
பின்னுயர் கல்விக் காக
அர்வகல் உசன தாங்கே
அருராம நாதன் பள்ளி
பெயர்பெற உயர்த ரங்கன்
பெற்றகந் தையா எங்கே?

மனையறம் நண்ணும் எண்ணும்
மனமுறு கந்தை யாவும்
நினைவுற மீசா லைமேல்
நீள்கதி ராசிப் பிள்ளை
தனையுறும் கந்தை யாவும்
தந்தெழு வரிலே பூமாள்
முனைவுயர் இராசம் மாவை
முயன்றடைந் திருந்தோ ரெங்கே?

எண்ணிய இல்ல வாழ்வை
எய்திய கந்தை யாவும்
புண்ணிய மைந்த ராகப்
புகலஆண் தாதி யாக
நண்ணுசி வகுமார் மனையே
நல்றூப வதனியா சிரியை
கண்ணிய மக்கள் மேன்மை
கண்டவர் கடந்தோ கொண்டார்

சீர்மகள் சிவசோ திப்பெண்
சேர்குண ரத்தி னந்தான்
நேர்போக்கு வரத்தில் சேவை
நிறைந்தசா ரதியா ரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்பெறும் இல்ல வாழ்வில்
பயனுற வாழ வைத்தோர்
ஓர்பெறும் உள்ளம் வேறாய்
ஓடுதல் உவப்ப தாமோ?

சிவநிதி பட்ட தாரி
சிறப்பினா சிரியை முன்னாள்
பவநிதி யாக மேலாய்
பாங்குறு தர்ச னோடு
நவநிதி மக்க ளாக
நன்குமித் தாலி மேவ
தவநிதி அதுவாய் மேன்மை
தந்ததாம் தந்தை எங்கே?

சிவமகன் சிவத ரன்தான்
சிறப்புற பிரதி பாவும்
உவமையி னுயர்வ தான
ஓர்மகள் உடனு மாக
நவதவ நிலைய தாக
நண்ணியே லண்ட னுற்று
எவரிவ ரிணையே என்று
ஏற்றிவைத் திருந்தோ ரெங்கே?

தகவுறு சிவம திப்பெண்
தான்மகள் பொருளா தாரம்
மிகவுறு மபிவி ருத்தி
மேவுமேற் பதவி யுற்று
சுகமுறு கமல தாசன்
சொல்லுமம் பதவி யாளர்
சகமுறு மக்கள் கூட்டச்
சார்புற வைத்தோ ரெங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பெரும் நடத்து நர்யாழ்
நவில்போக்கு வரத்துச் சேவை
உற்றுடன் சாலை தன்னில்
உயர்நேரக் கணிப்ப ராக
மற்றிரு பத்தைந் தாண்டாய்
மருவியீ ரைந்தாண் டின்முன்
சற்றுடன் ஓய்வ துற்றோர்
சாலைவே றெதுவோ பெற்றார்?

ஓர்கிரா மோத யத்தில்
உற்றமுன் னேற்றச் சங்கம்
நேர்கிரா மத்தின் மேலே
நீளபி விருத்திச் சங்கம்
சார்புமே லமைப்பி லெல்லாம்
தலைவர்கூட் டுறவின் கண்ணே
சேர்சமா சத்தில் அங்கம்
சேர்த்தவர் சேர்ந்த தெங்கே?

ஊரதன் வீதி ஆக்கி
உற்றமின் சாரங் கூட்டி
ஓரதன் உயர்வு காத்த
உத்தமர் கலையார் வத்தால்
பேரதன் நாட கங்கள்
பேசுற இயக்கி ஆங்கே
சீரதன் நடிக ராயும்
சிறந்தவர் சேர்ந்த தெங்கே?

குலமுறு தெய்வம் பேணிக்
கோயில்வை ரவர்க்கே ஆங்கு
தலமுறு நிலையில் தானே
தாங்குபூ சகரு மாகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமுறு பயன தோடு
பலவழி பாடு செய்வோர்
நலமுறு வகைய தாக
நண்ணிய தேச மெங்கே?

வெல்விடத் தற்ப ளைதான்
விஞ்சுற வந்த நல்லோர்
பல்லுயர் பணிக ளாங்கு
பாங்குறத் தந்த வல்லோர்
மெல்லுயர் மனையாள் தன்னை
மிளிரமீ சாலை யுற்றோர்
தொல்லுயர் மிருசு வில்மேல்
தொடர்ந்தனர் இறுதி வாழ்வே!

எண்ணிய எண்ணி யாங்கு
இயற்றிடும் இனிய நல்லோர்
புண்ணிய மதுவும் செய்து
புத்திகள் புகன்று நின்று
கண்ணிய நிலைய தாகக்
கருமமே காத்த நல்லோர்
நண்ணிய தேசந் தன்னை
நானிலம் அறியு மோதான்!

## கவிக்கூற்று

ஏறியே எற்றி நின்று
எம்மையே சுற்றிப் பற்றி
மாறியே தேறி டாமல்
மடக்கியே அடக்கிக் கொண்டு
ஊறியே உயரு கின்ற
உள்ளமார் சோக மிங்கு
கூறியே கொள்ள உள்ள
கூற்றதாம் வெள்ள மன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிய உறவுகளின் பிரிவுத்துயர்...
## மனையாளின் மனக்கலக்கம்

அன்றது மண நாள் தொட்டு
    அருமைசேர் பெருமை யோடு
நன்றது செய்து மக்கள்
    நலமுறப் பலவே நல்கி
நின்றது நினைவில் என்றும்
    நின்றிட ஒன்று மின்றிச்
சென்றது என்றார் சோகம்
    சேருதே மாற்ற வாரீர்!

## பிள்ளைகளின் உள்ளக்குமுறல்...

பற்றதாய்ப் பெற்று முற்றும்
    பற்றவே கற்று மற்றும்
உற்றதாய் உயர்வு கொள்ள
    ஒன்றியே பற்றில் பற்றல்
அற்றதாய் ஆவி ஏகி
    அசைவிலா நிலையில் இங்கு
வெற்றதாய் உடலே காணும்
    வேதனை விலக்க வாரீர்!

அலைகடல் அதனுக் கப்பால்
    அருகென அமைந்த நாங்கள்
நிலையென நினைத்த வாழ்வு
    நீங்கினால் நிறைவ தெங்கே
மலையென மாண்பு காட்டி
    மகளவர் மகன்மார் நாமே
தலையென நிலைபே றெய்தத்
    தந்தவர் தாங்கள் எங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருகர் மருகியரை மருவிய மனத்துயர்...

உருகிய உள்ள மோடு
ஒன்றதாய் நன்றாய் நின்றே
பருகிய பாசங் காட்டும்
பண்புயர் மாமா தாங்கள்
மருகிய ரோடு நாளும்
மருகரும் அருகன் பென்றால்
சொருகிய விழிய தாகிச்
சொல்லிடா தகன்ற தேனோ?

## பேரர் பேர்த்தியர் பெருந்துயர்...

பேரரோ பேர்த்தி யோராய்
பேருற நின்ற நாளில்
சீரதே செய்து எம்மைச்
செப்பமாய்க் காத்த தாத்தா
சேரவே வேற தாகச்
செப்பிடாத் தேசம் நாடிப்
பாரதே துறந்தால் நாங்கள்
பதைத்திடா திருக்க லாமோ?

## உற்றார், உறவினர், நண்பர்கள், பற்றாளர்கள், மற்றோர் உற்ற சோகம்....

உற்றவர் உறவு கொண்டோர்
உயரிய நண்பர் பற்றால்
நற்றவ இணைப்பே பெற்ற
நாங்களோ மற்றோ ரெல்லாம்
முற்றுயர் நிறைவ தோடு
முன்னுறப் பேணுந் தாங்கள்
சற்றொரு சிறிது போதில்
சாவினைச் சார லாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

எண்ணதன் கணக்க தாக
ஏகிடும் வயது மென்று
மண்ணதன் மயக்க வாழ்வை
மாபெருந் துயராய் எண்ணி
விண்ணதன் வீதி மேவி
வீடுபே றடைதல் தன்னைக்
கண்ணதன் மணிய தென்றே
கருத்தொடு போற்ற வேண்டும்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

## தோஷம் நீங்க ஏற்றவேண்டிய தீபங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ராகு தோஷம் | - | 21 தீபங்கள் |
| 2. | சனி தோஷம் | - | 9 தீபங்கள் |
| 3. | குரு தோஷம் | - | 33 தீபங்கள் |
| 4. | துர்க்கைக்கு | - | 9 தீபங்கள் |
| 5. | ஈஸ்வரனுக்கு | - | 11 தீபங்கள் |
| 6. | திருமண தோஷம் | - | 21 தீபங்கள் |
| 7. | புத்திர தோஷம் | - | 51 தீபங்கள் |
| 8. | சர்ப தோஷம் | - | 48 தீபங்கள் |
| 9. | காலசர்ப தோஷம் | - | 21 தீபங்கள் |
| 10. | கலத்திர தோஷம் | - | 108 தீபங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தை குறித்த சிந்தை நிறைந்த விந்தை மொழிகள்

அன்றென்றும் என்றென்றும் நின்றிங்கு அறிவை
நன்றென்ற வகைமீது ஒன்றென்று உதவிக்
குன்றென்ற நிலைமேவி வென்றொன்றும் எந்தை
சென்றெந்த வழியுற்றார் இன்றொன்றல் இன்றி!

சிந்தைக்கு இனிதான சீரான மேன்மை
தந்துற்ற தலையாய தந்தைக்கு நிகராய்
வந்துற்ற வகையோடு வளமான தளமாய்
எந்தப்ப ரெவரிங்கு இணையென்று வருவார்

அந்தந்த நிலைமீதுவந்திங்குபெறுமோர்
அந்தங்கள் அவையற்ற சொந்தங்கள் துணையாய்
முந்துந்தம் முனைவோடு முதலாக வரினும்
இந்தன்பு நிறைதந்த தந்தைக்கு நிகரோ?

சொந்தங்கள் பந்தங்கள் வந்திங்கு போகும்
தந்திங்கு பெறுகின்ற அந்தந்த உறவும்
எந்தெந்த வகையிந்த உறவென்று கூறும்
இந்தெங்கள் உறவந்தத் தந்தைக்கு நிகரோ?

புலமுற்ற பலமற்ற நிலைபெற்ற நிலையோர்
நலமுற்ற வகையோடு உலகுற்ற போதும்
குலமுற்ற முறையேது பலமுற்ற அறிவால்
தலமுற்ற தலைவாழ்வு தருவோரென் தந்தை!

பெற்றோரில் பற்றோடு முற்றேநல் உலகை
உற்றோர மற்றேதும் வெற்றான சிறுமை
அற்றேநல் லறிவான செறிவான நிறைவில்
கற்றோரோ கற்றேறக் கற்பிக்கும் தந்தை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்மைக்கும் மென்மைக்கும் என்னென்னு மரிய
தன்மைக்கும் இடனாகித் தன்னன்பில் அறிவால்
உன்னற்கு அரிதான தென்னத்தன் வகையால்
முன்னுற்ற வழிதேர மொழிதந்த தந்தை!

பாசத்தின் நிலைவேறு பரிவான பெரிதோர்
நேசத்தின் நிறைவோடு நிலையான பலவாம்
வாசத்தின் வளமோடு வருகின்ற வகையாம்
கோசத்தின் உயருண்மை கொண்டாடும் தந்தை!

சிறுமைக்குச் செல்லென்ற சொல்லொன்று சொல்லி
வறுமைக்கும் அதுபோல வெறுமைக்கும் கூறிப்
பொறுமைக்கும் இடனாகிப் பெறமுற்று மருளி
மறுமைக்கும் மனமாகி மறைவுற்ற தந்தை!

மாறாத மனமோடு மாறான வழிகள்
கூறாது நிறைவான கூறான மொழியால்
தேறாத மனமிங்கு தெளிவாக வழிமேல்
பேறான முறைகூறும் பேரான தந்தை!

என்னோடு இணைவான இடரான தடையைத்
தன்னோடு வரவைத்துத் தடையிங்கு படவே
முன்னோடு பின்னாக எந்நாளும் பேணி
இந்நாளில் இலதென்ற இடரிட்ட தந்தை!

குனியாது இனிதான தனியான நிலையில்
கனிவான கதையோடு இனியாகு மௌனலாய்
நனிமேவி நடமாடி நமதான கடமை
முனியாது முடியென்று மொழிகின்ற தந்தை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் நல்லோரின் நலமிங்கு காண(ச்)
சொல்லோடு வெவ்வேறாய் வினையிங்கு தந்து
எல்லாமே இனிதாக இணையின்றி ஏற்கும்
வல்லாளர் எவரெந்தை வகையாக வருவார் !

உதிரத்தின் உறவோடு உளமார வளமாய்
புதிரொத்த புகழோடு புவியுற்ற தந்தை
எதிரொத்த இணையற்ற எமதாவி யானோர்
கதிரொத்த கருணைக்குக் கடவுள்வே றெவரோ!

சோகங்கள் மேகங்கள் எனஓடிப் போக
பாகங்கள் நிறைவான பயனென்ப தாக
வேகங்கள் விதியான கதியாக ஏக
தாகங்கள் தடைதீர்த்த தலையாய தந்தை.

மிச்சங்கள் அதுவான மெச்சென்ற நிலைமேல்
உச்சங்கள் அதுவான பெறுமான நிறைவாய்
அச்சங்கள் அதுபோக மெதுவாக இதமாய்
எச்சங்கள் இலதென்று உலவுற்ற தந்தை.

அறமான திறமோடு பெறுமான முறவே
மறமான மறுவேறு பிறவாகி அறவே
புறமான குறைமாறி நிறைபேறு பெறவே
திறமான உறவாக உறவாடும் தந்தை!

சிந்தைக்குச் செறிவோடு அறிவிங்கு சார
விந்தைக்கு விதமோடு வினையிங்கு சேர
தந்தைக்கு நிகரென்று தலையாய பணியைத்
தந்துற்ற வகைவந்து எந்தப்ப ரமைவார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றொன்று மறிவோரில் நன்றென்று மன்றில்
வென்றொன்ற வினைதந்த நன்றிக்கென் றென்றும்
நின்றொன்று தவமக்க ளென்றன்று உதவி
நன்றொன்ற இன்றெந்தை சென்றெங்கு சேர்ந்தார்?

அழியாது அருளாக அவரெங்கள் தந்தை
தெளிவான மொழிவேறு தினமிங்கு தந்த
மொழியாத பொருளான மொழிநெஞ்சு வந்து
ஒளியாக உயிரோடு உறவாடும் என்றும்!

## ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து போட வேண்டிய தடுப்பு ஊசிகள்

**01 பிறந்தவுடன்** -BCG தடுப்பூசி கசநோய் வராது தடுக்க

**2ம் மாதம்** - முக்கூட்டு வக்சீன், தொண்டை கரப்பான் ஈர்ப்பு வலி, குக்கல் என்பவற்றை கட்டுப்படுத்த இத்துடன் போலியோ இளம் பிள்ளை வாதம் வராமல் தடுக்க

**4ம் மாதம்** - மேற்கூறிய மூக்கூட்டு வக்சின் + போலியோ

**6ம் மாதம்** - மேற்கூறிய மூக்கூட்டு வக்சின் + போலியோ

**9ம் மாதம்** - சின்னமுத்து தடுப்பு மருந்து

**18ம் மாதம்** -($1^1/_2$ வயது)
முக்கூட்டு மருந்து + போலியோ

**36ம் மாதம்**-(3வயது) - MR - சின்னமுத்து + ஜேர்மன் சின்னமுத்து என்பவற்றை தடுக்க

**5 வயது** -D-T
இரு கூட்டு தடை மருந்து தொண்டை கரப்பான் ஈர்ப்புவலி, போலியோ

**8 வயது** -ஜேர்மன் சின்னமுத்து (Rubella)

**10 வயது** -atd, ஈர்ப்புவலி, தொன்டை கரப்பான் தடை மருந்து

**வயது வந்த பெண்கள்** - (Rubella ) ஜேர்மன் சின்னமுத்து தடை மருந்து (11-44 வயது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருகிய பரிவுடன் உள்ளத்தில் உள்ள குணக்குன்றான உத்தம மாமா

கொள்ளத்தக்க குணத்தோடு உள்ளத்தில் உறைகின்ற உயரிய குணக்குன்றான உத்தம மாமா அவர்களின் உருகிய பரிவையும் பெருகியபாசத்தையும் எண்ணுகின்ற நேரமெல்லாம் கண்மேகமானது கண்ணீர் மழை பொழியாமல் இருப்பதில்லை. அருமைச் சிரிப்பினால் அரவணைக்கும் அறிகுறி காட்டி,உரிமைக்குரிய உறவோடு போற்றிடும் நிலையில் ஏற்றன உரைத்து, மாற்றமது இல்லா மணியான மனத்தோடு ஏற்றமதை எமது உள்ளமானது மெள்ளவே கொள்ள , தக்கனவான மிக்கபல் வழிகளை எடுத்துரைத்த இனிய மாமா இன்று எம்மிடையே இல்லை!நல்லவராயும் வல்லவராயும் பல்துறை அறிவு சொல்பவராயும் சொல்லொரு நெறியில் செல்பவராயும் என்றென்றும் நன்றே நின்றிருந்த மாமா எமது பிள்ளைச் செல்வங்கள் பெற்றிட வேண்டிய கல்விச் செல்வத்தைப் பற்றிச் சொல்லாதிருந்த நாள்களே இல்லை எனலாம்.செல்வது என்று சொல்வது போல நல்லரு நிலைப்போ இல்லையென்கின்ற பொருட் செல்வத்தைப் போற்றுவதை விடவும் மேலாக, அழியாத வழியில் ஒளியாக உயரும் கல்விச் செல்வத்தை என்றென்றும் போற்றி நின்றிட வேண்டும் என்று வெல்லுஞ் சொல் சொல்லும் நல்லுயர் மாமாவை இலகுவில் மறந்திடல் அரிதினும் அரிது.

சேவையின் செம்மலாய்ச் சிறந்திருந்த சீரிய மாமா அவர்கள் ஊரதை உயர்த்த உழைத்த பாங்கை நன்றியுலகு என்றென்றும் நன்றே நினைவில் நிறுத்திடும். தன்னரும் ஊராம் விடத்தற்பளையில் மின்னொளி மிளிரப் பன்னரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். ஊரதில் அமைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரிலாப் பாதைகளை நேரதில் அமைக்க அரிய பல முயற்சிகளைச் சரிவரப் புரிந்துள்ளார். சங்கங்களென்றும் தாபனங்களென்றும் விளங்கிய அமைப்புக்களிலே நிலைபெறு தலைவராக, தலைநிலை அங்கத்தவராகப் பலபல காலம் நிலைபெற நின்று நீள்பணிபல நிறுத்தியதை அறியாதார் அறியாதாரே.

போக்குவரத்துத் துறையில் அரும்பணியாற்றிய அருமையர் போக்கின் பிடிக்குள் அகப்படவேண்டியாயிற்று. காலங்களிக்கும் கருமம் புரிந்த கண்ணியர் காலத்தை நீட்டும் கருமம் புரியத் தெரியாதவராகி விட்டார்! பாசத்தின் இருப்பிடமாக இருந்த மாமாவைப் பாசக் கயிற்றுக்கு. இரையாக்கி விட்டான் காலங்கணிக்கும் காலன். காலங்கணிக்கும் காலனுக்குப் பாசங் கணிக்கும் பக்குவம் இல்லாது போயிற்றே! உண்மையரான மாமா அவர்களின் புண்ணுடம்பு தீயொடு சேர்ந்து விட்டாலும் புகழுடம்பு ஆம், சேவையின் சிறப்பு என்றும் நன்றே. நின்று நிலைத்திடும், இந்நிலையில் அன்னவர் ஆத்மா இன்னருள் எய்த என்னரும் ஈசன் பொன்னடி அதனை ஏற்றிப் போற்றித் துதிக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**க. சோ . மோகனதாஸ்**
ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறக்குமா?....

சைவமும், தமிழும் தழைத்தோங்க ,முக்கனிகளும் நிறைந்து வளம் கொழிக்கும் தென்மராட்சியின் கிழக்குத் திசையிலே விடத்தற்பளை எனும் கிராமத்தில் 1943ம் ஆண்டு அவதரித்தார் அண்ணர் கந்தையா அவர்கள்.

மெல்ல அடியூன்றி அன்னை மடியிலே மழலையாய்த் ,துள்ளித் திரிந்த வேளையில், பள்ளிப் பருவம் தள்ளி விட்டால் அள்ளிப் பருக முடியாது என்பதனை உணர்ந்து கொண்ட பெற்றோர்கள் முதலிலே ஆலயத்திலும் பின்னர் வித்தியாலயத்திலும் இவரை இணைக்கத் தவறவில்லை.

சுட்டித்தனமாகவும், கெட்டித்தனமாகவும் கல்வி கேள்விகளிலே சிறந்து விளங்கிய அண்ணர் கந்தையா அவர்கள் ஆரம்பக் கல்வியை யா விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்திலும் ,இடைநிலைக் கல்வியை யா உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திலும் கற்றுத்தேறினார். தனது 22ஆவது அகவையிலே (1965) இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பஸ் நடத்துநராக சேவையாற்ற ஆரம்பித்தார்.

"உத்தியோகம் புருஷ இலட்சணம் " என்பார்களே! இப்போது இவர் ஒரு குடும்பத் தலைவருக்குரிய அந்த இலட்சணத்தை அடைந்ததால் பெற்றோர்கள் இவருக்கு மீசாலையூர் இராசம்மா என்பவரைத் திருமணம் செய்து வைத்து மகிழ்ந்து வாழ்ந்தனர். குரு பக்தியும் தெய்வ பக்தியும் நிறைந்து வாழ்ந்த அண்ணர் கந்தையா அவர்கள் தனது குழந்தைகளுக்குச் சிவ நாமத்தையே முதலாகக் கொண்டு அவர்களின் திருநாமங்களைச் சூட்டி மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பிள்ளைகளை நிறைவாகக் கற்கச் செய்தது மட்டுமல்ல அவர்கள் இந்த மண்ணிலே மக்களோடு மக்களாக இணைந்து வாழ வழியமைத்துக் கொடுத்தார். மற்றவர்களுக்கு உதவுவது, எல்லோரோடும் அன்பாகப் பழகுவது, குடும்பத்தின் நல்ல தந்தையாக , நல்ல தாயாக எப்படி வாழ்வது என்ற விடயங்களையெல்லாம் அவர்களுக்கு ஊட்டி வளர்த்தார்.

இவ்வாறு சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வரும் வேளையிலேயே அவரின் தொடர்பு எனக்கும் கிடைத்தது. எம்மூர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பதவியை அவர் அலங்கரித்த போது அவரோடு இணைந்து பணியாற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது ஈசன் திருவிளையாடலே.

அறிவு சார்ந்த சிந்தனை, வசீகரமான தோற்றம், அன்பான பேச்சு அத்தனைக்கும் அதிபதி அண்ணர் அவர்களேதான். அப்பவே நினைத்திட்டேன் இவரைக் கொண்டு ஏராளம் எங்கடை ஊருக்குச் செய்யலாம் என்று.

அண்ணை என்பேன், சொல்லுங்கோ தம்பி என்பார். தன் நெஞ்சைத் தடவியபடி சொன்னால் சொன்னது தான் அத்தனையும் நடக்கும் அப்படியே ஒழுங்காய். சிலவேளை நான் நினைப்பதுண்டு, “இவர் என்ன மந்திர ஜாலம் தெரிந்தவரோ” இல்லை, இல்லை அப்ப தான் ஞாபகம் வந்தது இவற்றை குல தெய்வம் வைரவற்றை அருட்கடாச்சம் என்று, அதனை நினைந்து மன மகிழ்ச்சி அடைவேன்.

ஒரு உண்மைச் சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தம் என நினைக்கிறேன். “ஒரு நாள் விடத்தற்பளைக் கிராமத்துக்கு அதுதான் எங்கடை ஊருக்கு மின்சாரம் எப்படியாவது எடுத்துவிட வேண்டுமென்று நானும் வைத்தியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(டொக்ரர்) ஆறுமுகம் ஐயாவும் அண்ணர் அமரர் கந்தையா அவர்களுமாகச் சேர்ந்து யாழ் மாவட்டச் செயலகத்தின் மாடிப்படிகளிலே ஏறி அப்போதிருந்த மாவட்டச் செயலர் கணேசு ஐயாவைச் சந்திக்கச் சென்றிருந்தோம்.

அலுவலக வாசலிலே ஒரு அம்மா எடுத்த எடுப்பிலேயே சொல்லிப் போட்டா "ஐயா கொழும்புக்குப் போகப் போறார், அவரை இண்டைக்கு யாரும் சந்திக்கேலாது." நாங்கள் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்து முகத்தைச் சுழிச்சுக் கொண்டோம். அந்த நேரம் பார்த்து அண்ணர் கந்தையா அவர்கள் அந்த அம்மணிக்குக் கிட்ட மெதுவாகச் சென்று " பிள்ளை குறை நினைக்காதேங்கோ உந்த மாடிப்படியளிலை ஏறினது எனக்கு மூச்சு நிக்கிற மாதிரிக் கிடக்குது. இனியும் ஒரு தடைவை ஏறுறதெண்டால் எப்படியம்மா! முடியும். ஒரு இரண்டு நிமிடம் தாருங்கோ ஐயாவைச் சந்திச்சுக் கொண்டு வந்திடுறம்" என்று கெஞ்சலாகவும் , புத்தி சாதுரியமாகவும் சொல்ல, "சரி கெதியாப் போட்டு வாருங்கோ" என்று அனுமதி கிடைக்கிறது.

உள்ளே சென்ற நாங்கள் கணேசு ஐயாவுக்கு முன்னே அமர்ந்து கொண்டோம். அமரர் கந்தையா அண்ணர் அவர்கள் எங்களுக்கு முன்னரே சொல்லித் தந்த மாதிரி எங்கடை கிராம நிலவரங்கள் எல்லாத்தையும் ஒன்றும் விடாமல் மூவரும் மாறி மாறிச் சொல்லி எப்படியாவது எங்களுக்கு மின்சாரம் கிடைக்க உதவ வேண்டுமென்று விடாப்பிடியாய் நின்றோம்.

உடனே தொலைபேசி அழைப்பு மாவட்ட திட்டமிடல் பகுதிக்குப் பறக்கிறது. ஒரு இரண்டு நிமிடத்திலை தொலைபேசியை வைத்துவிட்டு கணேசு ஐயா சொன்னார், "உங்கடை ஊர் மின்சாரத்திற்கெண்டு **10.5**மில்லியன் ரூபா இன்று மின்சார சபைக்குப் பாரப்படுத்தப்படும்", என்ற அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியான பதில் எங்கள் செவிகளுக்கு இன்பம் தந்தது. அப்பவும் நான் நினைத்துக் கொண்டேன் கந்தையா அண்ணன்ரை குல தெய்வம் வைரவர் எங்களுக்கு முன்னம் மாவட்டச் செயலகத்தின் மாடிப்படிகளிலே ஏறி வந்திட்டார் என்று. உண்மை, உண்மை அத்தனையும் உண்மை.

இப்படிப்பட்ட ஒரு மகான், மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்து எங்களுக்கு மின்சார ஒளியை ஏற்றி விட்டுத் தான் நித்தியமான அந்தச் சோதிப்பிளம்பினுள் மறைந்து கொண்டது.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற வான்புகழ் வள்ளுவன் வார்த்தை மெத்தச் சரி மெத்தச் சரி . சுத்தமாய் மனுசன் சொன்னது எல்லாம் சரி .... சரியே!

புலர்ந்த பொழுதொன்று
புதிராகிப் போனதம்மா!
புரியாது துடிக்கின்றோம்
புலம்பி அழுகின்றோம்
பாசப் பிணைப்பு பதைக்கும் வண்ணம்
ஈசனடியில் இணைந்ததம்மா
வாழ்ந்த மனிதன் மரணம் தன்னால்
வீழ்ந்து போவான் விதியின் முடிவாம்

இப்படிக்கு,
கூடன் பிறவாத் தம்பி,

**து. செல்வராசா.**

(ஆசிரிய ஆலோசகர் தென்மராட்சி கல்வி வலயம்
விடத்தற்பளை– மிருசுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தான பலன்கள்

*யாகங்கள், ஹோமங்கள் செய்யும்போது அவரவர் சக்திக்கேற்ப தானங்கள் செய்வது சாஸ்திர விதி.*

*சாதாரண காலங்களில் "பாத்திரமறந்து பிச்சையிடு" என்ற பழமொழிக்கேற்ப தகுதியறிந்து செய்யும் தானங்களினால் பல்வேறு புண்ணிய பலன்கள் உண்டு. அவற்றில் சிலவற்றை கீழே தருகின்றோம்.*

1. அன்னதானம் - தரித்திரமும், கடனும் நீங்கும்
2. வஸ்திர தானம் - ஆயுளை விருத்தி செய்யும்
3. பூமி தானம் - பிரம்மலோகத்தையும் ஈஸ்வரதரிசனத்தையும் தரும்
4. தேன்தானம் - புத்திரபாக்கியம் உண்டாகும்
5. கோதானம் - ரிஷிக்கடன், தேவகடன், பிதிர்க்கடன் ஆகியவற்றை அகற்றும்.
6. நெல்லிக்கனி தானம்- ஞானம் உண்டாகும்
7. தீபதானம் - கண்பார்வை தீர்க்கமாகும்
8. அரிசிதானம் - பாவங்கள் போக்கும்
9. நெய்தானம் - நோய் நீங்கும்
10. பால்தானம் - துக்கம் நீங்கும்
11. தயிர்தானம் - இந்திரிய விருத்தி
12. தேங்காய் தானம்- பூரண பலன், நினைத்தகாரியம் முடியும்
13. பழங்கள் தானம் - புத்தியும் சித்தியும் கிட்டும்
14. தங்கம்(சொர்ண) தானம் - குடும்ப தோஷம் நீங்கும்
15. வெள்ளிதானம் - மனக்கவலை நீங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பற்றொடு முற்றும் பெற்ற
பாசமார் நேசர் தந்தை
வெற்றுடல் விட்டு விட்டு
விலகிய துயரில் வாட
மற்றுடன் அருகாய் எம்மை
மனமதாய்த் தேற்றி ஏற்று
உற்றுடன் உதவி நின்ற
உயரிய உளத்தி னோர்க்கும்,
உற்றநல் லுறவோர் நண்பர்
ஓதுமஞ் சலிக்கண் ணீரோர்
மற்றமுன் மருந்தர் மாண்பாய்
மன்னிடும் கிரியை செய்தோர்
அற்றை நாள் ஊர்வ லத்தில்
அண்டியே சுடலை வந்தோர்
பெற்றநேர் நிலையோர்க் கெல்லாம்
பேசரும் நன்றி நன்றே.



*இவ்வண்ணம்*

**மனைவி, பிள்ளைகள்**


| | |
|---|---|
| *கவிதை:* | **முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம்**<br>ஓய்வுநிலை அதிபர்,<br>பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் |

அச்சுப்பதிப்பு :- ரம்யன் அச்சகம், வைத்தியசாலை வீதி, மட்டுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




*அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமும் ஆகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



Ramyan Printers Madduvil. 0773471022

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org